# சரத் வீரசேகரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு!



யாழ், சாவகச்சேரியிலும் முன்னெடுப்பு



பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தொடர்பாகத் தெரிவித்த கருத்தினைக் கண்டித்து யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற முன்றலில் சட்டத்தரணிகள் இன்றைய தினம் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

கடந்த 22 ஆம் திகதி முல்லைதீவு நீதிபதி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அவதூறு பரப்பும் வகையிலும் நீதித்துறையின் சுதந்திரத்தைக் கேள்விக்கு உட்படுத்தும் வகையிலும் நாடாளுமன்றத்தில் உரையாற்றியமையைக் கண்டித்தும் எதிர்ப்புத் தெரிவித்தும் முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் இன்று காலை 9.30 முதல் 10.30 வரை நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து அடையாளக் கண்டன போராட்டத்தை நடத்தியிருந்தது.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 06 வெள்ளிக்கிழமை 25.08.2023 கதிர் 58

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

## தைரியமிருந்தால் வெளியில் வந்து கதைக்கட்டும்! நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகரவுக்கு

### வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தினர் சவால்



முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்த கருத்துக்களுக்குக் கண்டனம் தெரிவித்து வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஒருமணி நேர பணிப்புறக்கணிப்பும் ஆர்ப்பாட்டமும் இன்று முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அன்ரன் புனிதநாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர மன்றுக்குள் இருந்து கொண்டு கதைக்காமல் தைரியமிருந்தால் வெளியில் வந்து கதைக்கட்டும் என்று சவால் விட்டுள்ளார்.

நிலுவையில் உள்ள குருந்தூர் மலை தொடர்பான வழக்கினை விசாரித்து வரும் நீதிபதியை

2 ➤



## கஜேந்திரகுமார் வீட்டை முற்றுகையிட முஸ்தீவு பொலிஸாரும் அதிரடிப்படையினரும் கடமையில்!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பிலுள்ள வீட்டிற்கு முன்னால் பெருமளவு பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

சீலரத்ன தேரர் தலைமையிலான குழுவொன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின்

2 ➤

## நீதித்துறைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் சரத் வீரசேகரவை உடனே கைது செய்!



### யாழில் தனி நபர் போராட்டம்

நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையீடு செய்து நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுக்கும் சரத் வீரசேகரவை உடனடியாக கைது செய்ய வேண்டும் ,என வலியுறுத்தி அடக்கு முறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசா யாழ் நீதிமன்ற கட்டிட தொகுதிக்கு முன்பாக அடையாள உண்ணாவிரத

2 ➤

## இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். குண்டுதாரிகளா? பொலிஸ்மா அதிபருக்கு எச்சரிக்கை கடிதம்!

இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். குண்டுதாரிகள் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துத் தொடர்பாக தீவிரமாக ஆராய்ந்து பார்க்குமாறும் முறையான நடவடிக்கைகளை எடுத்து பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் தெரிவித்து அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை பொலிஸ்மா அதிபர் சீ.டி. விக்ரமரத்னவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில், கடந்த 23ஆம் திகதி நாடாளுமன்ற விவாதத்தின்போது சமிந்த விஜேசிறி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் குண்டுதாரிகள் நாட்டில் இருப்பதாகவும் அது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன அறிந்து வைத்துள்ளதாகவும்

2 ➤

## மதவாதத்தை முதலீடாக்க நீதிபதியை விமர்சிப்பதை ஏற்க முடியாது

### ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டு!

குருந்தூர் மலை விவகாரத்தில் தீர்ப்பு வழங்கிய நீதிபதியை அவமதித்து கருத்து வெளியிட்ட தென்னிலங்கை அரசியல் வாதிகளின் செயற்பாட்டை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வன்மையாக கண்டிக்கின்றது, என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் யாழ் ஊடக அமையத்தில் இன்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி நாடாளுமன்றத்துக்கு உள்ளே சில மதவாத அரசியல்வாதிகள் வெளியிடுகின்ற கருத்துக்கள் தமிழ் மக்களை ஆத்திரமூட்டுவதாக இருக்கின்றன.

குருந்தூர்மலை விடயம் தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் உடன்பாடு இல்லை எனில் அதை மேல்முறையீடு செய்வதற்கும் அல்லது உச்ச நீதிமன்றம் செல்வதற்கும் எமது நாட்டு சட்டத்தில் வழிவகைகள் உள்ளது.

அவ்வாறு இருக்கும்போது, தென்னிலங்கையில் நலிவடைந்து, மலிவடைந்துபோகும் சில அரசியல் பிரமுகர்கள் மதத்தை முதலீடாக்கி தமது அரசியல் இருப்பை நிலைநிறுத்திக்கொள்ள முயல்கின்றனர். அதன் வெளிப்பாடாக நீதித்துறையை இனவாத ரீதியில் விமர்சிக்க தலைப்பட்டுள்ளனர்.

இவ்வாறான கருத்துக்கள் இன நல்லிணக்கத்தில் இடைவெளியை உருவாக்கும் ஒன்றாகவே அமைகின்றன. அந்தவகையில் நீதிமன்ற தீர்ப்பை அவமதிப்பதும் தனிப்பட்ட ரீதியில் நீதிபதியை விமர்சிப்பதையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். (O1)

# விஜயகாந்துக்கு 71ஆவது பிறந்தநாள் உடல் நலன் குறித்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து சந்திப்பு!



தேமுதிக தலைவர் விஜயகாந்த் இன்று தனது 71ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, கட்சி நிர்வாகிகளையும் தொண்டர்களையும் சந்தித்துள்ளார்.

தொண்டர்களைப் பார்த்து உற்சாகமாகக் கையசைத்த விஜயகாந்த், நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் குழுவாகப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

கோயம்பேட்டில் உள்ள கட்சி அலுவலகத்துக்கு இன்று காலை 10.30 மணியளவில் வந்திருந்த விஜயகாந்த், அங்கு கட்சி நிர்வாகிகளையும் தொண்டர்களையும் சந்தித்துள்ளார். அவரது பிறந்தநாளையொட்டி ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

முன்னதாக, இந்த நிகழ்வு தொடர்பாக விஜயகாந்த் வெளியிட்டிருந்த அறிக்கையில், என்னுடைய உடல் நலன் தொடர்பாக வரும் செய்திகளை யாரும் நம்ப வேண்டாம். நான் நலமுடன் உள்ளேன் என்று குறிப்பிட்டிருந்தார். (04)

## 27 மில்லியன் கேரள கஞ்சா வடக்குக் கடலில் சிக்கியது!

27 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா தொகையொன்று வடக்கு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின்போது, கடலில் மிதந்த பொதிகளில் கேரள கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர். (04)

## மருத்துவத் துறையினரின் போராட்டம் நிறைவடைவு



மருத்துவத் தொழில் வல்லுநர் ஒன்றியம் முன்னெடுத்திருந்த அடையாளப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியுடன் நிறைவடைந்ததாக ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

குறித்த போராட்டம்யானது ஆட்சேர்ப்பில் காணப்படும் பிரச்சினை, கொடுப்பனவு வழங்காமை உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் காலை 8 மணி முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

## பொலிஸ் காவலில் பெண் மரணம் சந்தேக நபர்களைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது

வெலிக்கடையில் பொலிஸ் காவலில் வைத்து உயிரிழந்ததாகக் கூறப்படும் ராஜன் ராஜகுமாரியின் மரணத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் இன்று இது குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனையின் தீர்ப்பை வழங்கும் போதே, கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுலுவல இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (04)

## இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளாார்.

கடந்த காலங்களில், உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் சம்பவங்களினால் நாட்டில் பாரதூரமான பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு குழுவினரின் செயற்பாடுகள் தொடர்பாக இதற்கு முன்னரே தங்களுக்கு கிடைத்த தகவல்களை பாதுகாப்பு பிரிவினர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தபோதும், அது தொடர்பாக எவ்விதத் தீர்மானமும் எடுக்காமை அல்லது ஆராயாமையின் காரணமாக, கிறிஸ்தவ மக்கள் மாத்திரமின்றி ஒட்டு மொத்த இலங்கை மக்களும் பாதிப்படைந்திருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பொதுச் செயலாளர் அஷ்- செயிக் எம்.அர்கம் நுராமினினால் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (04)

## நீதித்துறைக்கு அச்சுறுத்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

நீதித்துறையின் சுதந்திரத்திக்கு அச்சுறுத்தல் விடுக்கும் சரத்வீரசேகர உள்ளிட்ட எனையவர்களையும் கைது செய்!, இனக்கலவரத்திற்கு ஏதுவாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டை முற்றுகையிட முனையும் அனைவரையும் உடனடியாக கைது செய்து நீதியின் முன் நிறுத்து!, உள்ளிட்ட கோஷங்கள் அடங்கிய பதாதைகளை காட்சிப்படுத்தி அவர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். (01, க)

## கஜேந்திரகுமார் வீட்டை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடிருக்கும் பகுதிக்கு விரைவதாகக் கிடைத்த தகவலையடுத்து அப்பகுதியில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் கொண்டுவரப்பட்டிருந்தனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் தெற்கில் சுதந்திரமாக வாழ்வதைப் போன்று, சிங்களவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் சுதந்திரமாக வாழ வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில அண்மையில் கூறியிருந்தார்.

சிங்களவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதன் ஆரம்பமாக, கொழும்பில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டின் முன்பாக இவ்வாரம் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தப் போராட்டத்தில் அனைத்து சிங்கள பௌத்தர்கள் மற்றும் இனவாத கொள்கையற்ற தமிழர்களும் கலந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டின் முன்பாக முற்றுகையிட்டு போராட்டம் நடத்த முயன்ற குழுவினருக்கும் பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிசாருக்குமிடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

## தைரியமிருந்தால் வெளியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கும் வகையிலான கருத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்திருந்தார். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அத்துடன், அவர் நாடாளுமன்ற வரப்பிரசாதத்தைப் பயன்படுத்தியே இவ்வாறு கதைக்கிறார். முடிந்தால் அவர் வெளியில் வந்து இதைக் கதைக்கவேண்டும்.

அவரது உரை தொடர்பாக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தலைவருக்கு முகவுரையிடப்பட்டு, ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர், நீதிச்சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றிற்கு அதன் பிரதிகளை அனுப்ப இருக்கின்றோம்.

இந்தக் கடிதமானது வடக்கு கிழக்கில் அமைந்துள்ள அனைத்துச் சட்டத்தரணிகள் சங்கங்களினது சார்பிலும் அனுப்பப்படவுள்ளது, எனவும் அவர் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், நீதியான சட்டவாட்சி நடைமுறைப்படுத்தப்படுவதை தடுக்காதே, அரசியல் வாதிகளே!, நீதிபதிகளை சுதந்திரமாக செயற்படவிடுங்கள், நீதிபதிக்கு மரியாதை கொடுங்கள், நீதித்துறையில் அரசியல் தலையிடு ஏன்? போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். (04)

## சரத் வீரசேகரவுக்கு எதிர்ப்புத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அடையாளப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் ஏனைய கிளைச் சங்கங்களும் தத்தமது நீதிமன்றங்களில் குறித்த அடையாள கண்டனப் போராட்டத்தினை மேற்கொண்டன.

யாழ்ப்பாண நீதிமன்றம் மற்றும் சாவகச்சேரி நீதிமன்றம் என்பவற்றுக்கு முன்பாக ஒன்று கூடிய சட்டத்தரணிகள் அமைதியாக பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் இடம்பெற்ற நேரத்தில் யாழ்ப்பாணத்தில் நீதிமன்ற செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி நீதிமன்ற சட்டத்தரணிகளின் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கறுப்புத் துணிகளால் வாய்களை மூடியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (01, க)




## தேவை

கல்வி சம்பந்தமான **You tube chanel** இற்கு ஆங்கில பேச்சுத்திறமையுள்ள **presenter** தேவை. (ஆங்கிலத்தில் சரளமாக உரையாற்ற எழுதக் கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**0752604360**

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# போதைப் பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகங்கள் எதிராக கிளிநொச்சியில் சிறுவர்கள் பங்கேற்ற பேரணி





கிளிநொச்சியில் போதைப் பொருள் பாவனை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராகப் பேரணி ஒன்று இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

வேல்ர்ட் விசன் அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டச்செயலகம், கண்டாவளை பிரதேசசெயலகம், கரைச்சி பிரதேச சபையினர் ஆகியோரின் ஆதரவோடு, ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் இணைந்து இந்தப் பேரணியை நடத்தினர்.

அதிகரித்து வரும் போதைப்பொரும் பாவனை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் இந்தப் பேரணி ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெற்றது. (02)

# கல்முனை பாலிஹாவின் புதிய அதிபராக கடமைகளை பொறுப்பேற்ற பழையமாணவி



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை வலயக் கல்வி அலுவலக உதவி கல்வி பணிப்பாளராகவும், கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றி வந்த, இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரி திருமதி ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ், இலங்கையின் பிரசித்தி பெற்ற பாடசாலைகளில் ஒன்றான கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசியப் பாடசாலை) புதிய அதிபராக கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

அவர் இன்று தனது கடமைகளை கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் முன்னிலையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)யில் தரம் ஒன்று முதல் உயர்தரம் வரை கற்ற பழைய மாணவியான இவர், அப்பாடசாலையின் ஆசிரியராகக் கடமையாற்றி, பின்னர் அதிபர் சேவைக்கும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

அந்தப் பாடசாலையின் வரலாற்றில் அதிபராகப் பொறுப்பேற்கும் முதலாவது இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியும் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனை வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றிய இவர், சிறந்த நிர்வாகத் திறமை கொண்ட அதிகாரியாக பலரது பாராட்டுக்களையும் பெற்றதுடன், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி தேசியப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டதன் பின்னர் அதிபராகக் கடமையேற்கும் முதலாவது பெண் அதிபருமாவார்.



# வரலக்சுமி விரத விசேட பூசை


சுமங்கலிப் பெண்கள் அனுட்டித்து வரும் வரலட்சுமி விரதமானது காரைதீவு ஸ்ரீ நாராயணன் சுவாமி ஆலயத்திலும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தமது துணையின் ஆரோக்கியமான ஆயுளை வேண்டி, ஏராளமான திருமணமான பெண்கள் இந்த விரதத்தினை மேற்கொண்டிருந்தனர்.

(படம் - வி.ரி.சகாதேவராஜா)



# எல்லை கோட்டை மதித்து செயல்பட வேண்டும்! சீன அதிபரிடம் இந்தியப் பிரதமர் வலியுறுத்தல்



தென்னாபிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் பிரிக்ஸ் உச்சி மாநாடு நடைபெற்றது. இதில் பங்கேற்ற இந்தியப் பிரதமர் மோடி, மாநாட்டுக்கு இடையே பல்வேறு நாட்டுத் தலைவர்களையும் சந்தித்தார். அதன் ஒரு பகுதியாக சீன அதிபர் ஷி ஜின்பிங்கையும் அவர் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு புதன்கிழமை நடைபெற்றதாகத் தெரிகிறது.

இதுதொடர்பாக ஜோஹன்னஸ்பர்கில் இந்திய வெளியுறவுச் செயலர் வினய் குவாத்ரா செய்தியாளர்களுக்குத் தகவல் வழங்கினார்.

சீன அதிபர் ஜின்பிங் உடனான சந்திப்பின்போது, இந்திய - சீன எல்லைப் பகுதிகளின் மேற்குக் கிளைப் பகுதியில் உள்ள எல்லை கோடு சார்ந்த பிரச்சினைகள் குறித்து பிரதமர் பேசினார். அப்போது அந்த பிரச்சினைகள் குறித்த இந்தியாவின் கவலையை பிரதமர் எடுத்துரைத்தார்.

இருநாடுகளுக்கு இடையிலான உறவு இயல்பு நிலைக்குத் திரும்ப எல்லைப் பகுதிகளில் அமைதியைப் பராமரித்து, எல்லைக் கோட்டை மதித்துச் செயல்படுவது அவசியம் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

இதன் அடிப்படையில், எல்லைப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ள இருநாட்டு ராணுவத்தினரையும் விரைந்து திரும்பப் பெற்று, அவர்கள் இடையே நிலவும் மோதல் போக்கின் தீவிரத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கையை மும்முரமாக்க, தத்தமது நாடுகளின் அதிகாரிகளுக்கு உத்தரவிட இருவரும் தீர்மானித்தனர் என்று தெரிவித்தார்.

ஜோஹன்னஸ்பர்கில் வியாழக்கிழமை செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொள்ள மேடைக்குச் சென்றபோது இந்தியப் பிரதமர் மோடியும், சீன அதிபர் ஜின்பிங்கும் சில நிமிடங்கள் பேசியவாறு நடந்து சென்றனர். அந்தச் செய்தியாளர்கள் சந்திப்பு நிறைவடைந்த பின்னரும், இருவரும் சில நிமிஷங்கள் பேசிவிட்டு கைகுலுக்கிச் சென்ற காட்சிகள் தென்னாபிரிக்க அரசு ஊடகத்தில் வெளியாகின.

எனினும் இருவருக்கும் இடையே முறைப்படி திட்டமிடப்பட்டு, ஏற்பாடு செய்யப்பட்ட எந்தச் சந்திப்பும் நடைபெறவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. (04)

# புகுஷிமா கதிரியக்க நீர் கடலில் கலப்பு ஜப்பானின் அண்டை நாடுகள் எதிர்ப்பு

பல்வேறு நாடுகளின் எதிர்ப்பையும் மீறி புகுஷிமா அணு மின் நிலையத்தின் கதிரியக்கக் கழிவினை ஜப்பான் வியாழக்கிழமை கடலில் வெளியேற்றத் தொடங்கியது.

இது, சீனா, தென் கொரியா உள்ளிட்ட நாடுகளைக் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஜப்பானிலிருந்து கடல் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு சீனா தடை விதித்தது. இது குறித்து அந்த நாட்டு வர்த்தகத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

கதிரியக்க நீரை கடலில் கலப்பது ஜப்பானின் சுயநல மற்றும் பொறுப்பற்ற முடிவு என்று விமர்சித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக தென் கொரியாவில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஜப்பானின் இந்த முடிவுக்கு அந்த நாட்டு அரசு ஆதரவு தெரிவித்தது அங்கு மிகப் பெரிய அரசியல் பிரச்னையாகியிருக்கிறது.

கடந்த 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக புகுஷிமா அணு மின் நிலையத்துக்குள் கடல் நீர் புகுந்தது. இதனால் அங்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் அணு உலைகளைக் குளிர்விக்கும் இயக்கம் நின்று போனது. அதையடுத்து, அந்த மின் நிலையத்தின் 3 அணு உலைகள் உருகின.

அந்த விபத்துக்குப் பிறகு அணு உலைகளிலிருந்து கதிரியக்க நீர் வெளியேறியது. அதனை பெரிய தொட்டிகளில் அவர்கள் தேக்கி வைத்தனர். தற்போது சுத்திகரிக்கப்பட்ட அந்த நீரை கடலில் கலக்க ஜப்பான் அரசு முடிவு செய்த நிலையில், ஜப்பான் சென்று அந்த நீரை ஆய்வு செய்த ஐ.நா. அணுசக்தி பாதுகாப்பு அமைப்பின் நிபுணர்கள், அதனைக் கடலில் கலப்பது பிரச்சினையை ஏற்படுத்தாது என்று அறிக்கை வழங்கினர்.

இந்தநிலையில், கதிரியக்க நீரை நேற்று முதல் ஜப்பான் கடலில் கலக்கத் தொடங்கியுள்ளது. (04)

# 2050 க்குள் உயர் வருமானம் கொண்ட நாடாக கம்போடியா மாறுமென பிரதமர் மானெட் உறுதி

கம்போடியாவில் கடந்த மாதம் 23 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதில் கம்போடிய மக்கள் கட்சி மகத்தான வெற்றி பெற்று நாட்டின் பிரதமராக 45 வயதான ஹன் மானெட் பதவியேற்றார்.

இதனையடுத்து தெரிவான அமைச்சரவைக் கூட்டத்தின்போது, இதில் பென்டகோனல் வியூகம்-1 என்ற ஒரு திட்டத்தை பிரதமர் ஹன் மானெட் அறிமுகம் செய்து வைத்துப் பேசினார்.

இந்தத் திட்டமானது நாட்டின் வளர்ச்சியை அதிகரிக்கவும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், சமத்துவத்தை உறுதிப்படுத்தவும் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

வருகிற 2050 ஆம் ஆண்டுக்குள் உயர் வருமானம் கொண்ட நாடாக கம்போடியாவை மாற்ற, தேசிய வளர்ச்சியை துரிதப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம் என அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத் துறையையே மிக முக்கிய வருமான வழியாகக் கொண்டிருக்கும் கம்போடியாவில், வறுமையில் உழலும் மக்கள் தொகையின் சதவீதம் அதிகமென்பது குறிப்பிடத்தக்கது. (04)

# தேர்தல் முடிவுகளை மாற்ற முயற்சித்த வழக்கில் ஜோர்ஜியாவில் நேற்றிரவு சரணடைந்தார் ட்ரம்ப்



அமெரிக்காவில் கடந்த 2017 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில், குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற்றார். ஆட்சியில் இருந்தபோது ட்ரம்ப் மீது ஏராளமான குற்றச்சாட்டுகள் எழுந்தன.

ஜோர்ஜியா மாகாணத்தில் கடந்த 2020 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மோசடி செய்ததாகவும் அவர் மீது புகார் கூறப்பட்டது. இதில் தேர்தல் முடிவுகளை முறைகேடாக மாற்ற முயன்றதாக ட்ரம்ப் உள்ளிட்ட 18 பேர் மீது மோசடி வழக்குப் பதியப்பட்டது. வழக்கு விசாரணைகள் ஜோர்ஜியாவின் அட்லாண்டா நீதிமன்றில் நடந்து வருகின்றன.

குற்றப்பத்திரிகையில் உள்ள 19 பேரிடமும் ஒரே நேரத்தில் விசாரணை நடத்த நீதிமன்றம் முடிவு செய்தது. எனவே ட்ரம்ப் உள்பட வழக்கில் தொடர்புடைய 19 பேருக்கும் கைது ஆணை பிறப்பித்து நீதிமன்று உத்தரவிட்டது. அதேசமயம் 25 ஆம் திகதிக்குள் தாமாக முன்வந்து ஆஜராகவும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஜோர்ஜியா தேர்தல் வழக்குத் தொடர்பாக அமெரிக்க நேரப்படி 24 ஆம் திகதி இரவு, 7 மணியளவில் அட்லாண்டா சிறையில் முன்னாள் அதிபர் டொன்ல்ட் ட்ரம்ப் சரணடைந்தார்.

பலத்த பாதுகாப்புடன் சிறையில் சரணடைந்த நிலையில், சிறை அதிகாரிகள் அவரது அடையாளங்களைக் குறித்தனர். சுமார் 20 நிமிடங்கள்வரை அங்கே பரபரப்பான நிலை காணப்பட்டது. அதன்பின் 2 லட்சம் அமெரிக்க டொலர்கள் பிணையாகச் செலுத்திய பின், அவர் விடுவிக்கப்பட்டார். விடுவிக்கப்பட்டதும், உடனடியாக விமானம் மூலம் நியூஜெர்சிக்குப் புறப்பட்டார்.

இந்த வழக்கில் 25 ஆம் திகதிக்குள் ட்ரம்ப் சரணடைய வாய்ப்புள்ளது என அரசுத் தரப்பு வழக்கறிஞரும், அதேவேளையில், நான் சரணடையப் போகிறேன் என்று ட்ரம்ப்பும் தெரிவித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# வட கொரிய உளவு செயற்கைக்கோள் ஏவும் முயற்சி மீண்டும் தோல்வியில்!



தங்களது உளவு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்த இரண்டாவது முறையாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் தோல்வியடைந்ததாக வட கொரியா வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

இது குறித்து வட கொரிய விண்வெளி ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மல்லிக்யாங்-1 உளவு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.

சொல்லிமா-1 என்ற புதிய வகை ரொக்கெட் மூலம் அந்த செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்பட்டது. அந்த ரொக்கெட்டின் முதல் மற்றும் இரண்டாவது நிலைகள் சரியாக இருந்தன. இருந்தாலும் மூன்றாவது நிலையில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அது வெடித்துச் சிதறியது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, தங்களது செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தவிருப்பதாக ஜப்பான் கடலோரக் காவல் படையிடம் வட கொரியா முன்கூட்டியே தகவல் தெரிவித்திருந்தது. கொரிய போர் முடிவுக்குப் பிறகு அந்த தீபகற்பப் பகுதியில் அமெரிக்காவும், தென் கொரி யாவும் தொடர்ந்து கூட்டு ராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய பயிற்சிகளை தங்கள் மீது படையெடுப்பதற்கான போர் ஒத்திகையாக வட கொரியா கருதுகிறது.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் தென் கொரியாவின் ராணுவ நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக உருவாக்கிய உளவு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்த வட கொரியா கடந்த மே மாதம் முயன்றது. எனினும், செயற்கைக்கோளை ஏந்திச் சென்ற ரொக்கெட் கட்டுப்பாட்டை இழந்து கடலில் விழுந்தது.

தற்போது, உளவுச் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் வட கொரியாவின் இரண்டாவது முயற்சியும் தற்போது தோல்வியடைந்தது. எனினும், இந்த முயற்சியைக் கைவிடப் போவதில்லை எனவும், மூன்றாவது முறையாக வரும் ஒக்டோபர் மாதம் மீண்டும் உளவுச் செயற்கைக்கோள் செலுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும் எனவும் வட கொரியா உறுதியாகத் தெரிவித்துள்ளது. (04)

# கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியாக இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரி

## யூ. எல். ரியாழ் கல்வியமைச்சால் நியமனம்

(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை கல்வி வலய, கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியாக கல்முனை கல்வி வலயத்தின் தமிழ்ப் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் யூ. எல். ரியாழ் இன்று கல்முனை வலயக்கல்விப் பணிமனையில் வைத்து வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் அவர்களிடமிருந்து தமது க்கடிதத்தைப் பெறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் உடனிருந்தனர்.

கல்முனை, சம்மாந்துறை கல்வி வலயங்களின் தமிழ்ப் பாட உதவிக்கல்விப் பணிப்பாளராக கடந்த பல வருடங்களாக கடமையாற்றிவரும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியான ரியாழுக்கு, அப்பதவிக்கு மேலதிகமாகவே இந்த கோட்டக்கல்வி அதிகாரி பதவியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அர்ப்பணிப்புடன் கடந்த காலங்களில் சேவையாற்றிய முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி ஏ. பீ. நஸ்மியா சனூஸ் விட்ட இடத்திலிருந்து சிறப்பாக செய்யவேண்டிய பொறுப்பு புதிய கோட்டக்கல்வி அதிகாரி ரியாலுக்கு இருப்பதாகவும், கடந்த காலங்களில் அவர் திறமையாக செயற்பட்ட அதிகாரி என்றவகையில் அவர் தன்னுடைய கோட்டத்தை முன்மாதிரியான கோட்டமாக உருவாக்க அர்ப்பணிப்புடன் செயலாற்றுவார் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தனது உரையில் தெரிவித்தார்.





# வடமாகாண அபிவிருத்தித் திட்டங்களுக்கு சுவிஸ் அரசு பூரண ஆதரவை வழங்கும்!

## தூதரக துணைத் தலைவர் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு சுவிஸ் அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் என இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் துணைத் தலைவர் திரு ஒலிவர் பிரஸ் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய வந்த அவர், வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் வடமாகாண மக்களின் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டது.

வடமாகாணத்தில் தற்போது தாம் முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் குறித்து சுவிஸ் தூதரகத்தின் துணைத் தலைவருக்கு ஆளுநர் விளக்கியிருந்தார். (O1)




# நாளுக்கு நாள் அதிகரிக்கும் வறட்சி கண் நோய்கள் அதிகரிக்கும் வாய்ப்பு

வடமத்திய, கிழக்கு மாகாணங்களுக்கும் வுவனியா, முல்லைத்தீவு, மொனராகலை ஆகிய மாவட்டங்களிலும் அதிக வெப்பம் காணப்படுவதால் அவசர எச்சரிக்கை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், அதிகரித்துவரும் வறட்சி காரணமாக தேவையான அளவு தண்ணீரை பருகுவதுடன் கண்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

மக்கள் மத்தியில் கண் தொடர்பிலான நோய்கள் அதிகமாக வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவையான அளவில் நீர் மற்றும் நீராகாரங்களை எடுத்துக்கொள்வதோடு, பணிகள் மற்றும் பயணங்களின்போது நிழலான இடங்களில் ஓய்வெடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க)

# காரைதீவு - மண்டூர் திருத்தல பாதயாத்திரை நாளை



(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு இந்து சமய விருத்தி சங்கம் ஏற்பாடு செய்துள்ள காரைதீவில் இருந்து மண்டூர் முருகன் ஆலயத்திற்கான திருத்தல பாதயாத்திரை நாளை சனிக்கிழமை காலை நடைபெற உள்ளது.

முருகப்பெருமான் திருவுருவப் படங்கள் தாங்கிய அலங்கரிக்க பட்ட ஏழு உழவு இயந்திரங்கள் முன்னதாக செல்ல, அடியார்கள் நந்திக் கொடி தாங்க , பஜனைப் பாடல்கள் சகிதம் நடைபெறவுள்ள இந்தப் பாதயாத்திரையில், காரைதீவு அடியார்களுடன் அட்டப்பள்ளம், திராய்க்கேணி, வீரமுனை ஆகிய கிராமத்தவர்களும் பங்கேற்பது வழமையாகும்.

நாளை அதிகாலை நான்கு மணியளவில் மாவடி கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து புறப்படும் பாதயாத்திரை, ஐந்து மணியளவில் கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்து, அங்கிருந்து

கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயம், ஸ்ரீ முருகன் ஆலயத்தை அடைந்து நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, கிட்டங்கி, சவளக்கடை, நாவிதன் வெளி, வேப்பயடி, தம்பலவத்தை ஊடாக மண்டூர் ஆலயத்தை சென்றடையும்.

# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் நிலைப்பாட்டை அங்கிகரித்தது அமெரிக்கா

## ஊடகப் பேச்சாளர் ஸ்ரீரங்கேஸ்வரன்

தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை நோக்கிச் செல்வதற்கு 13 ஆவது திருத்தச்சட்டம் வழிவகுக்கும் என அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ள கருத்தை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வரவேற்கின்றது என குறிப்பிட்டுள்ள அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் யாழ் மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், இந்நிலைப்பாட்டை கடந்த 33 அண்டுகளுக்கு மேலாக எமது கட்சி வலியுறுத்தி வருந்திருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றையதினம் டைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர், எமது கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் அதிலும் குறிப்பாக 13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக கொண்டு அதிலிருந்து நாம் முன்னேறி மேலும் அதிகாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்திருக்கின்றது.

எமது மக்களுக்கான அரசியல் நிலைப்பாட்டை விளாங்கிக்கொண்ட உலக வல்லரசான அமெரிக்காவின் துதுவர், இன்று சில நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழ் கட்சிகளை அழைத்து 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது புத்திசாலித்தனமானது என்ற கருத்தை தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்த விடயமானது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தீர்க்கதரிசனமான தூர நோக்கு கொண்ட அரசியல் தீர்வு முயற்சிக்கான ஓர் அங்கீகரமாகவே நாம் பார்க்கின்றோம்.

ஏற்கனவே சர்வதேசம் எமது பிரச்சினையில் தலையிடாது எமது பிரச்சினைகளுக்கான தீர்வை நாமே தேடிக்கொள்ள வேண்டும் என எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியபோது, சில அரசியல் கட்சிகளும் ஆய்வாளர்களும் அதனை பொருட்படுத்தாது ஒரு மலினமான கூற்றாக விமர்சனம் செய்திருந்தனர்.

ஆனால், அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சில அரசியர் கட்சிகளுடனான சந்திப்பில் அமெரிக்க தூதுவர் சர்வதேசம் ஒரு வரையறைக்கு மேல் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடாது என அழுத்தம் திருத்தமாக சொல்லியிருந்தார்.

அவ்விடயத்தையும் நாங்கள் நீண்டகாலமாக சொல்லிவந்ததே நடைமுறையில் சர்வதேசமும் ஏற்றுக்கொண்டது. இதுவும் எமது நிலைப்பாட்டுக்கு கிடைத்த அங்கீகாரமாகும்.

ஆயினும் சிலர் வாக்கு வங்கிகளையும் நாடாளுமன்ற ஆசனங்களையும் இலக்குவைத்து நடைமுறைச் சாத்தியமற்ற வெற்று வாக்குறுதிகளையும் ஆக்கிரோச கருத்துக்களையும் கக்கிய வண்ணமே இருந்தனர்.

இன்று உலக வல்லரசான அமெரிக்கா தனது நிலைப்பாட்டை படிப்படியாக வெளிப்படுத்திவரும் நிலையில், ஈ.பி.டி.பியின் நிலைப்பாடு அங்கீகாரம் பெற்றுவருகின்றது எனவும் அவர் தெரிவித்தார். (01, க)

# விசாரணையைக் கைவிட லஞ்சம் டிப்போ பொறுப்பதிகாரி கைது!

இலங்கை போக்குவரத்து சபையின் தியசென்புர டிப்போவின் பொறுப்பதிகாரி ஒருவர் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

60,000 ரூபா இலஞ்சம் கோரிய வேளையில் நேற்றையதினம் மெதிரிகிரியவில் வைத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குறித்த நபரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

பேருந்துப் பயணச் சீட்டு வழங்காத பேருந்து நடத்துனரிடம் விசாரணையைக் கைவிடுவதற்காக அவரிடம் இருந்து 60,000 ரூபாவை குறித்த அதிகாரி இலஞ்சமாகக் கேட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட டிப்போ அதிகாரி மேலதிக விசாரணைகளுக்காக பொலன்னறுவை பொலிஸ ாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (த)

# தலங்கமவில் துப்பாக்கிச் சூடு

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் இன்று காலை தலங்கம ரொபர்ட் குணவர்தன மாவத்தையில் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் கோரம்பே பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த நபர் தற்போது கொழும்பில் உள்ள தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

துப்பாக்கிதாரியும் அவரது சகாக்களும் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதுடன், சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (க)

# சட்ட விரோத கிரவல் அகழ்வைத் தடுக்க முயற்சி வியாழேந்திரன் - ஒப்பந்தகாரர் இடையே முறுகல்!



மட்டக்களப்பு - செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்படிச்சேனை பாலர்சேனை பகுதி யில் உள்ள சோதையன் கட்டு பகுதியில் கிரவல் அகழ்வு இடம்பெறுவதாக மக்கள் தெரிவித்ததையடுத்து இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் செங்கலடி பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர் உள்ளிட்டோர் இன்று பிற்பகல் அப்பகுதிக்குச் சென்றிருந்தனர்.

சோதையன்கட்டு பகுதியில் கிரவல் அகழ்வு இடம்பெறுவதை அவதானித்த இராஜாங்க அமைச்சர், பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட குழுவினர், குறித்த பகுதியில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் உக்காத கழிவு உள்ளதாகவும் அது உடைப்பெடுத்தால் ஆற்றில் கலக்கும் அபாயம் உள்ளதாகவும், சோதையன் கட்டு எனப்படுவது தமிழர் பாரம்பரிய கட்டாகும் அதை தகர்த்து கிரவல் அகழ வேண்டாம் எனவும் தெரிவித்து குறித்த வேலையினை உடன் நிறுத்துமாறு கோரினர்.

தாம் குறித்த பகுதியில் வன இலாகா திணைக்களம், புவிச்சரிதவியல் திணைக்களம் ஆகியவற்றில் அனுமதி பெற்றுத்தான் ஒப்பந்த வேலையினைப் பெற்றதாகவும், அதிக பணம் செலவழித்துள்ளதாகவும் தெரிவித்து வேலையினை இடை நிறுத்த முடியாது எனவும் ஒப்பந்ததாரர் தெரிவித்தனர்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன்போது தொலைபேசியில் வீடியோ பதிவு செய்தமை தொடர்பாகவும் முறுகல் நிலை உருவானது.

அப்போது அங்கு வந்த கரடியனாறு பொலிசார் இரு தரப்பினரிடமும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

குறித்த இடத்தில் வைத்தியசாலைக் கழிவுகள் உள்ளமையால் குறித்த வேலையை தற்காலிகமாக நிறுத்துமாறு பொலிசார் ஒப்பந்தக்காரர்களுக்கு தெரிவித்து, அங்கிருந்த கனரக வாகனத்தையும் அகற்றுமாறும் கோரினர்.

தனது அனுமதி இல்லாமல் இடம்பெறும் குறித்த வேலை தொடர்பிலும் இதற்கு முன் அனுமதி வழங்கிய தாக தெரிவிக்கப்படும் திணைக்களங்கள் தொடர்பிலும் கலந்துரையாடி, இது தொடர்பான முன்னேற்ற நகர்வை மேற்கொள்வதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார். (க)

யாழ் பல்கலைக்கழக பழைய மாணவர்கள், ஆன்மீக நாட்டமுள்ளவர்கள், மற்றும் இந்தியாவில் உள்ள சிதம்பர நடராஜர் ஆலயத்தின் வடக்கு மடத்தின் சங்கானையில் உள்ள சங்கானை மடம் கிளையும் இணைந்து நடாத்தும் நல்லைக் கந்தன் வருடாந்த உற்சவ கால மோர் விநியோகம் மற்றும் ஆன்மீக, சமூக மேம்பாட்டு விழிப்புணர்வு மற்றும் விளையாட்டு நிகழ்வுகள்.



இடம் : நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபம், நல்லூர்.

காலம் : 21.08.2023 தொடக்கம் 16.09.2023 வரை

திருமுன்னிலை

வணக்கத்திற்குரிய

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்.

| திகதி | கிழமை | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 21.08.23 | திங்கள் | 09.00 – 01.00 | ஆன்மீக நிகழ்வுகள் மேல்வருவத்தூர் ஆதி பராசக்தி, யாழ் கிளை |
| 22.08.23 | செவ்வாய் | 09.00 – 01.00 | ஆன்மீக மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்வு |
| 23.08.23 | புதன் | 09.00 – 01.00 | ஆன்மீக நிகழ்வு, தென்கயிலை உலக சமாதான ஆலயம், தலைப்பு யோக வாழ்வே நிறை வாழ்வு. திரு.ப.அச்சுதராஜா யோகா ஆசிரியர் |
| 24.08.23 | வியாழன் | 09.30 – 11.30 | ஆன்மீக நிகழ்வு, வாழும் கலை அமைப்பு, தலைப்பு : ஆனந்த வாழ்விற்கான அறிமுகம், திருமதி. மேகலா குணசிங்கம் |
| 25.08.23 | வெள்ளி | - | நல்லை ஆதீன நிகழ்வு |
| 26.08.23 | சனி | 09.00 – 01.00 | ஆன்மீக மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்வு |
| 27.08.23 | ஞாயிறு | 09.00 – 11.00<br>11.00 – 01.00 | ஆட்டிசம் பற்றிய சமூக விழிப்புணர்வு நிகழ்வு, சிறு தானிய உணவுப்பயன், விநியோகம் மற்றும் உணவு தயாரிக்கும் முறை Dr. கௌரிபாலன் UK. |
| 28.08.23 | திங்கள் | 09.00 – 01.00 | ஆன்மீக நிகழ்வு, பிரம்மகுமாரிகள் |
| 29.08.23 | செவ்வாய் | 09.00 – 01.00 | ஆன்மீக மற்றும் சமூக மேம்பாட்டு விழிப்புணர்வு நிகழ்வுகள். |
| 30.08.23 | புதன் | 09.00 – 01.00 | விளையாட்டு நிகழ்வுகள் : எமது விளையாட்டு வீரர்களை உலக தரத்திற்கு இட்டுச் செல்வது தொடர்பான கூட்டம். |
| 31.08.23 | வியாழன் | 09.00 – 01.00 | ஆன்மீக மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்வு. |
| 01.09.23 | வெள்ளி | 09.00 – 11.00<br>11.00 – 01.00 | ஈஷா யோகா அறிமுகம். Dr.கௌரிபாலன் அவர்கள். UK.<br>தமிழில் பூசை. உச்சி முருகன் கோவில். UK. |
| 02.09.23 | சனி | 09.00 – 01.00 | ULTRA FM & TV, ஊடகம் என்றால் என்ன. Asst Manager Mr. S.Raveen. |
| 03.09.23 | ஞாயிறு | 10.00 - 12.00 | ஆன்மீக நிகழ்வுகள் : சுவாமி அக்ஷராத்மானந்த அவர்கள் தலைவர், இராமகிருஷ்ண மிசன் கொழும்பு. |
| 04.09.23 | திங்கள் | 09.00 – 01.00 | ஆன்மீக மற்றும் சமூக விழிப்புணர்வு |
| 05.09.23 | செவ்வாய் | 09.00 – 01.00 | ஆன்மீக நிகழ்வு : அறிவித் திருக்கோவில் யாழ்ப்பாணம், முழுமை நல வாழ்விற்கு வேதாத்திரி மகரிஷி அருளிய மனவளக் கலை யோகா, பேராசிரியை J.செல்வி (தமிழ்நாடு சென்னை) |
| 06.09.23 | புதன் | 09.00 – 01.00 | ஆன்மீக மற்றும் சமூக மேம்பாட்டு விழிப்புணர்வு நிகழ்வுகள். |
| 07.09.23 | வியாழன் | | |
| 08.09.23 | வெள்ளி | | |
| 09.09.23 | சனி | | |
| 10.09.23 | ஞாயிறு | | |
| 11.09.23 | திங்கள் | | |
| 12.09.23 | செவ்வாய் | | |
| 13.09.23 | புதன் | | |
| 14.09.23 | வியாழன் | | |
| 15.09.23 | வெள்ளி | | |
| 16.09.23 | சனி | | |




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.08.2023இல் வெளியிடப்பெற்றது.